கட்டுரை

ஆர். பிரவின்குமார்



# வௌவால் எனும் அதிசய பாலூட்டி

வௌவால்கள் என்பவைகள் பாலுட்டி வகையைச் சேர்ந்தவைகள். உலகில் குட்டி போட்டு பால் கொடுக்கும், பறக்கும் பாலூட்டி வௌவாலே ஆகும்.



- உலகில் பாலூட்டிகளின் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்கு வௌவால்கள் ஆகும். வௌவாலில் இரண்டு வகைகள் உள்ளன,

  1. பழம்தின்னி வௌவால்
  2. பூச்சிஉண்ணும் வௌவால்,

- பொதுவாக வௌவால்கள் பகலில் ஓய்வெடுத்து இரவில் இரைதேடும் இரவாடிகள் (nocturnal ) ஆகும்.
- பூனையைப் போல வௌவால்கள் தன்னைத் தானே சுத்தம் செய்துகொள்ளும்
- உலகில் சுமார் 50 மில்லியன் வருடமாக இந்த வௌவால்கள் உள்ளன.
- தற்போது காடுகளும், சாலையோர மரங்களும் வேகமாக அழிந்து வருவதால் வௌவால்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

- பருவநிலை மாற்றமும், வாழிட அழிப்பும் வெளவால்கள் அழிவைத் துரிதப்படுத்தி வருகின்றன. (எடுத்துக்காட்டு: கோவில்களிலிருந்து வெளவால்கள் துரத்தப்படுதல்)
- வெளவால்கள் கூட்டம் கூட்டமாக வாழும் சமுதாய விலங்குகள்.
- வெளவால்கள் மனிதனுக்கும், சுற்றுச்சூழலுக்கும் அதிகமான நன்மைகளைச் செய்கின்றன.
- வெளவால்கள் தன் எடையைவிட மூன்று மடங்கு அதிக உணவை உண்ணுகின்றன.
- வெளவால்கள் எட்டு முதல் முப்பது வருடம் வரை வாழும்
- வண்டு வெளவால் (Bumble Bee Bat) என்பதுதான் உலகத்திலே மிகச் சிறிய வெளவால் வகை. இவை தாய்லாந்து மியான்மர் ஆகிய நாடுகளில் சுண்ணாம்பு குகைகளில் வாழ்கின்றன. இவை தீப்பெட்டிகுள் அடைபடும் அளவுக்குச் சிறியவை.
- பூச்சி உண்ணும் வெளவால்கள் வயல்வெளிகள், விளைநிலங்கள், தோட்டம் போன்ற இடங்களில் உள்ள பூச்சிகளைப் பிடித்து உண்ணுகின்றன. இவை ஒரு மணிநேரத்துக்குச் சுமார் 600-1200 பூச்சிகளைப் பிடித்து உண்ணும். இவை விதை பரவலிலும், மகரந்த சேர்க்கையிலும் சிறப்பான பங்கு வகிக்கின்றன.
- பல நாடுகளில் வெளவால்கள் நல்ல சகுனத்தின் அடையாளமாகக் கருதப்படுகின்றன.
- பெரிய பறக்கும் நரி (large flying fox) என்ற வெளவால்கள்தான் உலகில் பெரிய வெளவால்கள். இவற்றின் இறக்கை அகலம் ஆறு அடி ஆகும். இவை பழந்தின்னி வெளவால் ஆகும். மேலும் இவை பகலாடிகள் (diurnal) -அதாவது இரவில் ஓய்வெடுத்துப் பகலில் உணவு தேடும் உயிர்கள் ஆகும்.
- உலகத்தில் மொத்தம் 1116 வகை வெளவால்கள் உள்ளன, அதில் 117 வகை வெளவால்கள் இந்தியாவில் உள்ளன.
- வெளவால்களை வேட்டையிலிருந்து பாதுகாப்பதும், வெளவால் உள்ள மரங்களை வெட்டாமல் பாதுகாப்பதும் நம் கடமை.





வெளவால்கள் பற்றிய மேலும் பல சுவாரசியமான தகவல்களை கீழ்கண்ட இணையதளத்தின் மூலம் அறியலாம்

**http://pterocount.org**

